**O.S.No.27/2018** **தேதி – 07.07.2025**

**வா.சா.1. –ஜீப்ளி**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி–**

நான் பிரதிவாதிக்கு ஒரு வீடு கிரையம் செய்து கொடுத்தேன். ரூ.25 லட்சத்திற்கு கிரையம் செய்து கொடுத்தேன். வீட்டிற்கு வடக்கு பக்கம் உள்ள சுவர் சொந்த சுவராக வேண்டும் என்றும், வீட்டின் பின்பக்கம் சுமார் ½ செண்டு நிலம் கிரையமாக வேண்டும் என்றும் பிரதிவாதி கேட்டார் என்றால் சரியல்ல. ரூபாய் 25 லட்சம் கிரையத் தொகையை பிரதிவாதி என்னிடம் பணமாக கொடுத்தார். சுவர் மற்றும் பின்பக்கம் ½ செண்டு நிலம் சம்பந்தமான பிரச்சனை ஏதும் இல்லை என்றால் சரிதான். எல்லா கிரையத் தொகையும் வாங்கி கொண்டோம். கிரைய பாக்கி தொகை எதுவும் இல்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞருக்கு தகவல் சொன்னவர் யார் என்றால் நான்தான் தகவல் சொன்னேன். முதல் விசாரணையை நிருபண வாக்குமூலத்தில் நான்தான் தகவல் சொன்னேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் 2 வது பக்கத்தில் 5 வது பாராவில் கடைசியில் பிரதிவாதி தரவேண்டிய கிரையப் பாக்கித் தொகையை பிரதிவாதியிடம் இருந்து வசூல் செய்ய தனியாக நான் நடவடிக்கை எடுத்து வருவதாக சொல்லப்பட்டள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் நிருபண வாக்குமூலத்தில் 2 வது பக்கத்தில் 3 வது பாராவில் நான் பிரதிவாதியிடமிருந்து கிரைய பாக்கி தொகையை வசூல் செய்ய தனியாக நடவடிக்கை எடுத்து வருகிறேன் என்றால் சரிதான். 21.10.2013 ம் தேதி நான் கிரையம் முடித்தபோது பிரதிவாதி கிரைய பாக்கித் தொகை செலுத்த வேண்டியிருந்தது உண்மை தான் என்றால் சரியல்ல. மேற்படி தேதியில், எந்த நேரத்தில் கிரையம் முடிந்தது என்று எனக்கு ஞாபகம் இல்லை. அந்த கிரையப்பத்திரத்தில் யார் யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. புரோநோட்டு யார் எழுதிக் கொடுத்தார் என்றால் பிரதிவாதிதான் எழுதி வீட்டிற்கு கொண்டுவந்தார். எத்தனை மணிக்கு வந்தார் என்றால் மாலை 6.00 மணிக்கு வந்தார். அவரே 2 சாட்சிகளை அழைத்து வந்தார். புரோநோட்டில் கையெழுத்து போட்டு பணம் வாங்கி சென்றார். ஸ்டாம் ஒட்டியிருந்தார்கள். ஒரு ஸ்டாம்பு ஒட்டி இருந்தது. புரோநோட்டில் கையெழுத்து

போட்டார்கள். ஸ்டாம்பில் கையெழுத்து போட்டார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை. சாட்சி கையெழுத்தை யார் முதலில் போட்டார்கள் என்றால் முனியாண்டியாக இருக்கும். முனியாண்டி என்பவர் புரோக்கர் என்று எனக்கு தெரியும். மற்றொரு சாட்சி கையெழுத்து போட்ட நபர் ராமராஜ் ஆவர். எவ்வளவு ரூபாய் கொடுத்தேன் என்றால் ரூ.16 லட்சம் ஆகும். அதில் 32 கட்டுகள். எல்லாம் 500 ரூபாய் கட்டுகள் ஆகும். காலையில் என்னிடம் ரூ.25 லட்சம் கிரையத் தொகையை கொடுத்துவிட்டு, மாலையில் சில்லறை கடன் தீர்ப்பதற்காக பிரதிவாதி என்னிடம் கடன் கேட்டார். பிரதிவாதி காலையில் என்னிடம் ரொக்கமாக கொடுத்த கிரையத் தொகையை அப்படியே நான் வீட்டில் வைத்திருந்தேன். அதிலிருந்து ரூ.16 லட்சம் பிரதிவாதிக்கு நான் கடனாக கொடுத்தேன். கையெழுத்து போட்ட சாட்சிகளை விசாரித்தால் அனைத்து உண்மைகளும் தெரிய வரும் என்றால் சரிதான். கிரையப்பத்திரத்தை யார் எழுதியது என்றால் லட்சுமணன் என்பவர் எழுதினார். புரோநோட்டையும் லட்சுமணன் என்பவர் எழுதி கொடுத்தாரா என்றால் சரிதான். காலம் கடந்து இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் ரூ.50 ஆயிரம் வட்டிக்காக பணம் கொடுத்தார். அது எந்த தேதி என்றால் 12.06.2016 ம் தேதி ஆகும். பிரதிவாதியே எழுதி கையெழுத்து போட்டார். வா.சா.ஆ.1 புரோநோட்டில் பிரதிவாதியின் கையெழுத்தும், 12.06.2016 ம் தேதி வட்டி வரவுக்காக பிரதிவாதி போட்டுள்ள கையெழுத்தும் வேறுபாடாக உள்ளது என்றால் சரியல்ல. அதில் முனியாண்டியும், ராமராஜ் என்பவரும் கையெழுத்து போட்டார்கள் என்றால் சரிதான். புரோநோட்டில் பணம் வாங்கும் போது சாட்சி கையெழுத்து போட்டதற்கும், வட்டி வரவு வைத்த போது போட்ட சாட்சி கையெழுத்துகளும் வேறுபாடாக உள்ளது என்றால் சரியல்ல. 2021ல் என்னுடைய வருகையின்மையால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதை மீண்டும் 927 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டு, மன்னிக்கப்பட்டு, மீண்டும் கோப்புக்கு எடுக்கப்பட்டது என்றால் சரிதான். 08.07.2015 ம் தேதி எனது கணவர் நாகராஜனுக்கு ஐ.டி.பி.ஐ வங்கி ராஜபாளையம் கிளை மூலம் ரூ.4 லட்சத்தை பிரதிவாதி காசோலை மூலம் செலுத்தி அது அவரது கணக்கில் வரவாகி உள்ளது என்றாலும், அதே தேதியில் மேற்படி வங்கி காசோலை மூலம் ரூ.4 லட்சம் எனக்கு கொடுத்து அது என் கணக்கில் வரவாகி

உள்ளது என்றாலும் 10.07.2015ம் தேதி மேற்படி வங்கி காசோலை மூலம் எனது கணவர் நாகராஜனுக்கு ரூ.2 லட்சம் ஆக மொத்தம் ரூ.10 லட்சம் நாங்கள் பெற்றுள்ளோம் என்று சொன்னால் அது எனது கணவருக்கும் பிரதிவாதிக்கும் நடந்த பரிவர்த்தனையாக இருக்கலாம். எனக்கு அவர் எந்த பணமும் கொடுக்கவில்லை. பிரதிவாதி ஜமீன்கொல்லம்கொண்டான் தனியார் உதவிபெறும் மேல்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியர் என்றால் சரிதான். அவரது மனைவி சத்திரப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் பட்டதாரி ஆசிரியராக வேலை பார்த்து வருகிறார் என்றாலும் சரிதான். அவர்கள் இருவரும் மாதம் சராசரியாக ரூ.3 லட்சத்திற்கு மேல் சம்பளம் பெறுபவர் என்றால் அதனை பொறுத்து எனக்கு தெரியாது. அவர்களுக்கு உள்ள பொருளாதார நிலையில் அடிப்படையில் எங்களிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பிராதிலும், கிரைய பாக்கி உள்ளதாக கூறும் நிலையில் அதனை பொறுத்து தனியாக வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதி நான் சொன்ன தேதியில் என்னிடம் ரூ.16 லட்சம் பணம் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. கிரைய பாக்கித் தொகைக்காகவே தாவா புரோநோட்டு எழுதப்பட்டது என்று சொன்னாலும் சரியல்ல. நான் வழக்கிற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. காலவதியான புரோட்நோட்டை வைத்து, இவ்வழக்கை தாக்கல் செய்தது சட்டப்படியானது என்று சொன்னால் சரியல்ல. நான் வாங்கிய பணத்தை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா வழக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை.